1981 ஜனவரி 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு கடைக்கும் இவ்வளவு கார்டுகள் இருக்க வேண்டுமென்று வரைமுறைகள் இருக்கின்றன. ஆகவே, அதிகமான அளவிற்கு இருக்கிறது, நிலைமைகளைச் சமாளிக்க முடியவில்லை என்ற நிலை வருகிறபொழுது மேற்கொண்டு நியாய விலைக்கடைகளைத் திறக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அதைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பொழுதே வரைமுறை இருக்கிறது, இவ்வளவுதான் ஒரு நியாயவிலைக் கடை தாங்கும் என்றால் அந்த அளவிற்குக் கார்டுகள் ஒதுக்கப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தென்னைநார் ஏற்றுமதி

*வினா எண். 84—திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தென்னை நார் (மூலப்பொருட்கள்) வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், மூலப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப் படுவதை தடை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை. (ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் இருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற இந்தத் தேங்காய் நாரை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்பதற்காக குமரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு கொண்டுவந்து மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்படுவதாகவும், மேற்கு ஜெர்மனியிலிருந்து அது வேறு பொருட்களாக மாற்றப் பட்டு மீண்டும் நம்முடைய மாநிலத்திற்கும் இதர மாநிலங் களுக்கும் பெறுவதால் அதனால் நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு தேவையான மூலப்பொருள் கிடைக்காமல் ஆகிறது. கயிறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டு கயிறு தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வேலையில்லாத நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்தி லிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டு இருந்தால் அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனப் படுத்திய விவரத்தை அரசு கவனத்தோடு கவனிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கயிறு தொழிலாளர்கள் இருப்பதால் கயிறு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தத் தகுந்த ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டுள்ள இத்தகைய சிறு தொழில்களை நடத்துவதற்காக இருக்கின்ற அந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே உற்பத்தி செய்கின்ற தென்னை நார்களை குமரி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல தடை இருப்பதாக அறிகிறேன். அத்தடை நீக்கப்பட்டு, மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நார்களை எடுத்துச் செல்ல அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இந்தக் கேள்வியை திரு. டி. மணி கேட்டுவிட்டார்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்னை நார்களைக் கொண்டு வீடுகளிலே உபயோகப் படுத்துகின்ற ஃபர்னிச்சர் சாமான்களை உற்பத்தி செய்கின்ற புதிய டெக்னிக் வளர்ந்துள்ளது அமைச்சருக்குத் தெரியுமா! அப்படிப்பட்ட டெக்னிக்கைக் கற்றுக்கொண்டு, இங்கே குடிசைத் தொழில் மாதிரி பர்னிச்சர் செய்யக்கூடிய ஏற்பாட்டுக்கு, எந்த நாட்டுக்கு அந்த 'நோஹவ்' "Know-how" தெரியுமோ, அந்த நாட்டோடு தொடர்புகொண்டு, நல்ல குடிசைத் தொழில் மாதிரி வளர்க்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை மேற்கொண்டு இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைப் போல், தஞ்சை மாவட்டத்திலும் தென்னை நார் உற்பத்தி அதிகமாக இருக்கிற காரணத்தினால், தஞ்சை மாவட்டத்திலும் அத்தகைய தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு வத்தல் தொழிற்சாலை

*வினா எண். 85— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு வத்தல் (சிப்ஸ்) தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலே உருளைக்கிழங்கு அதிகமாக உற்பத்தியாகிறது. மிகவும் ருசியாக இருக்கிற உருளைக்கிழங்கு சீசன் காலத்திலே அதிகமாக உற்பத்தியாவதால், அதற்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அதோடு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் முறையிலே உருளைக்கிழங்குகள் அழுகி விடுகின்றன ஆகவே, விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் முறையில் நமது அரசாங்கம் சிப்ஸ் தயாரிக்கும் புதிய தொழிற்சாலையை அங்கு ஆரம்பித்தால், விவசாயிகளுக்கும் ஆதரவாக இருக்கும்; சிறு தொழிலை அபிவிருத்தி செய்கிற முறையிலே தமிழகத்திலே சிறுதொழிலை ஆரம்பிப்பதாகவும் இருக்கும். அந்த முறையிலே அரசாங்கம் சிப்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்குமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. ஆனால், தனியார் ஆரம்பிக்க முன்வந்தால், கோவை மாவட்ட தொழிற் மையத்தின் வாயிலாக எல்லா உதவிகளையும் அரசு வழங்கும்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தனியார்கள் ஆரம்பிக்கும்போது, அந்தத் தொழிலுக்குத் தேவையான உருளைக்கிழங்கு போன்றவைகளை சப்சிடியாக அல்லது கண்ட்ரோல் ரேட்டுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்து, அந்தத் தொழிலை பின்தங்கிய பகுதியில் ஆரம்பிக்கப்படுகிற தொழிலாகக் கருதுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான உதவிகளை, நியாயமான உதவிகளை இந்த அரசு செய்யும்.